INDIA PARTNER | Dabur GROUP

# அவிவா வெல்த் பில்டர்



AVIVA
| Life Insurance |



**அவிவா வெல்த் பில்டர் -** ஒரு தனி நபர், இணைப்பு இல்லாத, பங்கு பெறாத, சேமிப்புடன் கூடிய ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

நம் அனைவருக்கும் ஆசைகள் மற்றும் மைல்கல்கள், குழந்தையின் கல்வி / திருமணம் ஆகியவற்றிற்கான அர்ப்பணிப்பு அல்லது ஒரு கனவு இல்லத்தை வாங்குவது அல்லது வசதியாக ஓய்வு பெறுவது ஆகியவற்றை நம் வாழக்கையில் அடைந்திட நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம். இப்படிப்பட்ட நிகழ்வுகள் எப்பொழுது நடக்கிறதோ அதற்காக நாம் திட்டமிடுகிறோம் ஆனால் நம் கனவுகளின்படி அதை பூர்த்தி செய்து கொள்ளத் தேவையான அளவிற்காக நாம் எப்பொழுதுமே திட்டமிடுவதில்லை. அவிவாவில் நாங்கள் இதை அங்கீகரிக்கிறோம் மற்றும் நீங்கள் உங்கள் கனவுகளை முழுமையாக அடைந்திட உதவுவதற்காக நாங்கள் அவிவா வெல்த் பில்டர் திட்டத்தை சிறப்பாக வடிவமைத்திருக்கிறோம். இந்த ஆயுள் காப்பீட்டுத் திட்டம் நீங்கள் செலுத்தும் மொத்த பிரீமியத் தொகையை முதிர்வில் இரட்டிப்பாக்குகிறது. அது மட்டும் அல்ல, ஒரு வேளை நீங்கள் இல்லாத பொழுதும், உங்கள் குடும்பப் பாதுகாப்பை அவிவா வெல்த் பில்டர் மேலும் உறுதி செய்கிறது. எனவே மேலே செல்லுங்கள் மற்றும் உங்கள் கனவுகளைப் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்

**அவிவா வெல்த் பில்டர் - தனித்துவ ஈர்ப்புகள்**

- மரணத்தின் பொழுது உத்திரவாத பே அவுட் (வழங்குதல்): ஒரு வேளை துரதிர்ஷ்டவசமாக ஆயுள் காப்பீட்டாளர் மரணமுற நேர்ந்தால், மரண நாள் வரை அனைத்து உரிய பிரீமியங்களையும் செலுத்தி இருந்தால், நாங்கள் ரொக்க உத்திரவாதத்தை வழங்கி உங்கள் குடும்பத்தைப் பாதுகாப்போம்.
- உயிர்வாழும் பொழுது முதிர்வில் உத்திரவாத பே அவுட் (வழங்குதல்): அனைத்து உரிய பிரீமியங்களும் செலுத்தி இருந்தால், செலுத்திய மொத்த பிரீமியங்களின் இரண்டு மடங்கு ரொக்கத் தொகை வழங்கப்படும்.

**அவிவா வெல்த் பில்டர் - தகுதி**

<table>
<tr><th>வழியலகு</th><th>அளவுகோல்</th></tr>
<tr><td>நுழைவில் வயது</td><td>5 முதல் 50 வருடங்கள் வரை கடைசி பிறந்தநாளின்படி</td></tr>
<tr><td>பாலிசி காலம் மற்றும் பிரீமியம் செலுத்தும் காலம் (வருடங்களில்)</td><td><table>
<tr><th>பாலிசி காலம்</th><th>பிரீமியம் செலுத்தும் காலம்</th></tr>
<tr><td>13</td><td>ஒரே ஒரு பிரீமியம்</td></tr>
<tr><td>15</td><td>5</td></tr>
<tr><td>17</td><td>10</td></tr>
</table></td></tr>
<tr><td>முதிர்வில் வயது கடைசி பிறந்தநாளின்படி (வருடங்களில்)</td><td><table>
<tr><th>பாலிசி காலம்</th><th>குறைந்தபட்ச முதிர்வு வயது</th><th>அதிகபட்ச முதிர்வு வயது</th></tr>
<tr><td>13</td><td>18</td><td>63</td></tr>
<tr><td>15</td><td>20</td><td>65</td></tr>
<tr><td>17</td><td>22</td><td>67</td></tr>
</table></td></tr>
<tr><td>குறைந்தபட்ச வருடாந்திர / சிங்கிள்பிரீமியம்</td><td>ஒரே ஒரு பிரீமியம்: ₹1,50,000<br>வருடாந்திரப் பிரீமியம் 5 வழங்கல்: ₹75,000<br>வருடாந்திரப் பிரீமியம் 10 வழங்கல்: ₹50,000</td></tr>
<tr><td>அதிகபட்ச வருடாந்திர / சிங்கிள் பிரீமியம்</td><td>₹1,00,00,000 (ஒரு ஆயுளுக்கு), இது குழுமம் அனுமதி அளித்த எழுத்துக் காப்புறுதிக்கு (அன்டர் ரைட்டிங்) உட்பட்ட்து</td></tr>
<tr><td>அதிகபட்ச / குறைந்தபட்ச ரொக்க உத்திரவாதம்</td><td><table>
<tr><th>PPT</th><th>குறைந்தபட்ச ரொக்க உத்திரவாதம் (₹)</th><th>அதிகபட்ச ரொக்க உத்திரவாதம்</th></tr>
<tr><td>ஒரே ஒரு</td><td>3,00,150</td><td>2,00,25,000</td></tr>
<tr><td>5 டடீம்</td><td>7,50,562.501</td><td>10,01,50,000</td></tr>
<tr><td>10 டடீம்</td><td>10,01,750</td><td>20,05,00,000</td></tr>
</table>அதிகபட்ச ரொக்க உத்திரவாதம், ஒரு ஆயுளுக்கு (₹) இது குழுமம் அனுமதி அளித்த எழுத்துக் காப்புறுதிக்கு (அன்டர் ரைட்டிங்) உட்பட்ட்து</td></tr>
<tr><td>பிரீமியம் செலுத்தும் வீதம்</td><td>சிங்கிள் அல்லது வருடாந்திர</td></tr>
</table>

**தயவு செய்து குறித்துக் கொள்ளுங்கள்:**

1. ''*வருடாந்திர / சிங்கிள் பிரீமியம்'' என்பது பாலிசிதாரர் தேர்வு செய்தபடி ஒரு வருடத்தில் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகை ஆகும், இதில் வரிகள், ரைடர் பிரீமியமங்கள், அன்டர் ரைட்டிங் கூடுதல் பிரீமியங்கள் மற்றும் மோடல் பிரீமியங்களுக்கான கூடுதல் பிரீமியங்கள், ஏதாவது இருந்தால் அவை நீங்கலாக.
2. *ஒரே ஒரு பிரீமியமானது, எழுத்துக் காப்புறுதி (அன்டர் ரைட்டிங்) கூடுதல் பிரீமியம் மற்றும் வரிகள், ஏதாவது இருந்தால் அவை நீங்கலாக.
3. வரிகள், பின்வருவனவற்றை சேர்த்து ஆனால் அதனுடன் வரையறை இல்லாத, சரக்கு மற்றும் சேவை வரி, பொருத்தமான செஸ்கள் ஆகியவை அரசாங்கம் அவ்வப்பொழுது அறிவித்தபடி விதிக்கப்படும். வரிச் சட்டங்கள் மாற்றத்திற்கு உட்பட்டது.
4. பின் தேதி இடும் காலங்களுக்காக, பொருந்தத்தக்க பிரீமியம் மற்றும் ஆண்டிற்கு 9% மாத கூட்டு வட்டியாக மற்றும் வரிகள், ஏதாவது இருந்தால் அவை அனைத்தையும் செலுத்தும் பொழுது, பாலிசியை நடப்பில் இருக்கும் நிதி ஆண்டுக்குள் பின் தேதி இடமுடியும்.
5. பாலிசியின் துவக்கத்தில்ஆயுள் காப்பீட்டாளர் ஒரு வேளை இளையவராக (மைனர்) இருந்தால்:
   - காப்பீடு உடனடியாகத் துவங்கும்
   - ஆயுள் காப்பீட்டாளரின் சார்பாக பாலிசிதாரர் பரீமியத்தை செலுத்தலாம், அவர் பெற்றோர், பாட்டி, தாத்தா அல்லது சட்டபூர்வ பாதுகாவலர் ஆகிய யாராவது ஒருவர் இருக்கலாம். பிரீமியம் செலுத்தும் காலம் முடியும் முன்னர் ஒரு வேளை பாலிசிதாரர் இறக்க நேரிடும் பொழுது, எதிர்காலப் பிரீமியத்தை, ஆயுள் காப்பீட்டாளரின் உயிர் வாழும் பெற்றோர் / சட்டபூர்வ பாதுகாவலர் செலுத்த முடியும். ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளர் இளையவராக இருந்தால் (மைனர்) மற்றும் எதிர்காலப் பிரீமியங்கள் செலுத்தாமல் இருந்தால், காலாவதி / பெய்ட் அப் ஷரத்துக்கள் பிரயோகிக்கப்படும்.
   - ஆயுள் காப்பீடாளர் இளையவராக இருக்கும் பொழுது, ஒரு வேளை பாலிசிதாரர் மரணமுற நேர்ந்தால், ஆதார ஆவணங்கள் சமர்ப்பிப்பதன் பெயரில் மற்றும் இழப்பீடு கோரல் ஒப்புக் கொண்ட பிறகு ஆயுள் காப்பீட்டாளரின் உயிர்வாழ் பெற்றோர் / சட்டபூர்வ பாதுகாவலர் பாலிசிதாரராகக் கருதப்படுவார்.
   - ஆயுள் காப்பீட்டாளர் அவரது 18 வது வயதை பூர்த்தி செய்த உடன் பாலிசியானது தானாகவே அவரது பெயருக்கு மாற்றப்படும்.

**நன்மைகள்**

**மரண அனுகூலம்**

- ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளர் மரணமுற நேர்ந்தால், மரண நாள் வரை அனைத்து உரிய பிரீமியங்களையும் செலுத்தி இருந்தால், நாமினிக்கு வழங்கப்படும் தொகையானது ரொக்க உத்திரவாதத்திற்கு நிகரான தொகையாகும்.




''வருட பிரீமியம்'' என்பது பாலிசிதாரர் தேர்வு செய்தபடி ஒரு வருடத்தில் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையாகும், இதில் வரிகள், ரைடர் பிரீமியங்கள், எழுத்துக் காப்புறுதி (அன்டர் ரைட்டிங்) கூடுதல் பிரீமியங்கள் மற்றும் மோடல் பிரீமியங்களின் லோடிங்குகள், ஏதாவது இருந்தால் அவை நீங்கலாக.

**முதிர்வு நன்மை:**

- அனைத்து உரிய பிரீமியங்களும் செலுத்தி இருந்தால் மற்றும் ஆயுள் காப்பீட்டாளர் முதிர்வு நாள்வரை உயிர் வாழும் பொழுது, முதிர்வில் ரொக்க உத்திரவாதம் வழங்கப்படுகிறது

**உதாரணம்:**
35 ஆவது வயதில் நீங்கள் 15 வருட பாலிசியை எடுத்துக் கொண்டு மற்றும் 5 வருடங்களுக்கு வருடாந்திரப் பிரீமியமாக ₹1,00,000 (மொத்தம் 5 இலட்சம்) செலுத்தினால், நீங்கள் முதிர்வில் (50 வயதில்) உத்திரவாத நன்மையாக ₹10,01,250/- பெறுவீர்கள்




செலுத்திய மொத்த பிரீமியங்கள் என்றால், பெறப்பட்ட் அனைத்து மொத்த பிரீமியங்கள், இவற்றில், ஏதாவது கூடுதல் பிரீமியம், ஏதாவது ரைடர் பிரீமியம் மற்றும் வரிகள் ஆகியவை நீங்கலாக

''வருட பிரீமியம்'' என்பது பாலிசிதாரர் தேர்வு செய்தபடி ஒரு வருடத்தில் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையாகும், இதில் வரிகள், ரைடர் பிரீமியங்கள், எழுத்துக் காப்புறுதி (அன்டர் ரைட்டிங்) கூடுதல் பிரீமியங்கள் மற்றும் மோடல் பிரீமியங்களின் லோடிங்குகள், ஏதாவது இருந்தால் அவை நீங்கலாக.

**ரொக்க உத்திரவாதம் ஒரு 1000 க்கான சிங்கிள் / வருடாந்திரப் பிரீமியம்**

| நுழைவில் வயது | பாலிசி காலம் = 13 வருடங்கள் | பாலிசி காலம் = 15 வருடங்கள் | பாலிசி காலம் = 17 வருடங்கள் |
|---|---|---|---|
| | பிரீமியம் செலுத்தும் காலம் = சிங்கிள் | பிரீமியம் செலுத்தும் காலம் = சிங்கிள் | பிரீமியம் செலுத்தும் காலம் = சிங்கிள் |
| 5-25 வருடங்கள் | 2,002.50 | 10,015.00 | 20,050.00 |
| 26-35 வருடங்கள் | 2,002.00 | 10,012.50 | 20,045.00 |
| 36-40 வருடங்கள் | 2,001.50 | 10,010.00 | 20,040.00 |
| 41-50 வருடங்கள் | 2,001.00 | 10,007.50 | 20,035.00 |

''வருட பிரீமியம்'' என்பது பாலிசிதாரர் தேர்வு செய்தபடி ஒரு வருடத்தில் செலுத்த வேண்டிய பிரீமியத் தொகையாகும், இதில் வரிகள், ரைடர் பிரீமியங்கள், எழுத்துக் காப்புறுதி (அன்டர் ரைட்டிங்) கூடுதல் பிரீமியங்கள் மற்றும் மோடல் பிரீமியங்களின் லோடிங்குகள், ஏதாவது இருந்தால் அவை நீங்கலாக.

ஒரே ஒரு பிரீமியமானது எழுத்துக் காப்புறுதி (அன்டர் ரைட்டிங்) கூடுதல் பிரீமியம் மற்றும் வரிகள், ஏதாவது இருந்தால்.

**ஒரு வேளை குறைந்தது இரண்டு வருடங்கள் ரெகுலர் பிரீமியங்கள் செலுத்தாமல் இருந்தால்**

- கருணைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் உரிய பிரீமியம் பெறப்படாவிட்டால், பாலிசி காலாவதி ஆகிறது.
- உரிய பிரீமிய நாளில் இருந்து பிரீமியம் செலுத்துவதற்கு கருணைக் காலமான 30 நாட்கள் வழங்கப்படுகிறது.
- காலாவதியான ஒரு பாலிசியை புதுப்பித்துக் கொள்ள செலுத்தாத முதல் உரிய பிரீமிய (FUP) நாளில் இருந்து ஐந்து வருடங்கள் பாலிசிதாரருக்கு உள்ளது.
- ஒரு வேளை காலாவதியான பாலிசியை புதுப்பித்துக்காவிட்டால், செலுத்தாத முதல் உரிய பிரீமிய நாளில் இருந்து ஐந்து வருடங்களுக்குப் பிறகு, செலுத்திய மொத்த பிரீமியங்களின் 30%ஐ வழங்கி பாலிசி முடிவு பெறும்.
- புதுப்பித்தல் காலத்திற்குள் ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளர் மரணமுற நேர்ந்தால், மொத்த பிரீமியங்களின் 100% வழங்கப்பட்டு பாலிசி முடிவு பெறும்.

செலுத்திய மொத்த பிரீமியங்கள் என்றால், பெறப்பட்ட அனைத்து மொத்த பிரீமியங்கள், இவற்றில், ஏதாவது கூடுதல் பிரீமியம், ஏதாவது ரைடர் பிரீமியம் மற்றும் வரிகள் ஆகியவை நீங்கலாக.

**ஒரு வேளை குறைந்தது இரண்டு வருடங்கள் ரெகுலர் பிரீமியங்கள் செலுத்தி இருந்தால்**

- கருணைக் காலம் முடிவு பெறும் முன் ஒரு வேளை உரிய பிரீமியம் பெறப்படாவிட்டால், பாலிசியானது பெய்ட் அப் பாலிசியாக மாறும்.
- உரிய பிரீமிய நாளில் இருந்து பிரீமியம் செலுத்துவதற்கு கருணைக் காலமாக 30 நாட்கள் உண்டு.
- பாலிசியை புதுப்பித்துக் கொள்ள செலுத்தாத முதல் பிரீமிய நாளில் (FUP) இருந்து பாலிசிதாரருக்கு ஐந்து வருடங்கள் கிடைக்கிறது.
- ஒரு வேளை பெய்ட் அப் பாலிசி புதுப்பிக்காவிட்டால், பாலிசியானது குறைக்கப்பட்ட நன்மைகளுடன் அதாவது பெய்ட் அப் ரொக்க உத்திரவாதத்துடன் தொடரும். பெய்ட் அப் உத்திரவாதமானது:

செலுத்திய பிரீமியங்களின் எண்ணிக்கை
பெய்ட் அப் ரொக்க உத்திரவாதம் = ---------------------------------------- X ரொக்க உத்திரவாதம்
பாலிசியின் கீழ் செலுத்த வேண்டிய பிரீமியங்களின் மொத்த எண்ணிக்கை

ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளர் முதிர்வுக்கு முன்னர் மரணமுற நேர்ந்தால் அல்லது முதிர்வு வரை உயிர் வாழும் பொழுது, ஒரு பெய்ட் அப் பாலிசியில், பெய்ட் அப் ரொக்க உத்திரவாதம் வழங்கப்படுகிறது.

**புதுப்பித்தல்:**

- ஒரு காலாவதியான / பெய்ட் அப் பாலிசியை செலுத்தாத முதல் பிரீமிய நாளில் இருந்து 5 வருடங்களுக்குள் புதுப்பித்துக் கொள்ளலாம்
- புதுப்பித்தலானது, நிறுவனத்தின் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட நடப்பில் இருக்கும், எழுத்துக் காப்புறுதி (அன்டர்ரைட்டிங்) வழிகாட்டுதல்களின்படி, ஆயுள் காப்பீட்டாளர் தொடர்ச்சியாக காப்பீடு செய்து கொள்ள முடியும் என்பதற்கான ஆதாரத்தை நிறுவனத்தின் திருப்திக்கு ஏற்ப சமர்ப்பிப்பதற்கு உட்பட்டதாகும்.
- அனைத்து உரிய பிரீமியங்களும். புதுப்பித்தல் கட்டணமான ₹250 வரிகள் மற்றும் செலுத்தாத அனைத்து உரிய பிரீமியங்களுக்கும் தாமதமான காலத்திற்கு வட்டியாக ஆண்டிற்கு 9% மாத கூட்டு வட்டியாக மற்றும் வரிகள், ஏதாவது இருப்பின் அவற்றையும் சேர்த்து செலுத்துவதற்கு உட்பட்டது.
- புதுப்பித்தல் கட்டணம் மற்றும் வட்டி விலையானது எதிர்காலத்தில் IRDAIவின் மறு பரிசீலனைக்கு உட்பட்டது.

**சரண்டர் மதிப்பு (SV)**

- ஒரே ஒரு பிரீமிய பாலிசியை பாலிசி காலத்தில் எந்நேரத்திலும் சரண்டர் செய்ய முடியும்.
- ஒரு ரெகுலர் பிரீமியம் பாலிசியை, குறைந்தபட்சம் இரண்டு வருட பிரீமியங்கள் செலுத்திய பிறகு சரண்டர் செய்ய முடியும்.

வழங்கப்படும் சரண்டர் மதிப்பானது, உத்திரவாத சரண்டர் மதிப்பு அல்லது சிறப்பு சரண்டர் மதிப்பு, ஆகிய இரண்டின் அதிகமானது.

இதில்:
உத்திரவாத சரண்டர் மதிப்பு (GSV) = GSV காரணி செலுத்திய x மொத்த பிரீமியங்கள்

செலுத்திய மொத்த பிரீமியங்கள் என்றால், பெறப்பட்ட அனைத்து மொத்த பிரீமியங்கள், இவற்றில், ஏதாவது கூடுதல் பிரீமியம், ஏதாவது ரைடர் பிரீமியம் மற்றும் வரிகள் ஆகியவை நீங்கலாக

GSV காரணியானது பாலிசி காலம் மற்றும் கீழே அளிக்கப்பட்டுள்ளபடி, சரண்டர் செய்யும் வருடம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆகும்.

| பாலிசியை சரண்டர் செய்யும் வருடம் | பாலிசி காலத்திற்கான GSV காரணிகள் | | |
|---|---|---|---|
| | 13 வருடங்களில் | 15 வருடங்களில் | 17 வருடங்களில் |
| 1 | 75% | 0% | 0% |
| 2 | 75% | 35% | 35% |
| 3 | 90% | 50% | 50% |
| 4 | 90% | 50% | 50% |
| 5 | 90% | 50% | 50% |
| 6 | 90% | 50% | 50% |
| 7 | 100% | 75% | 55% |
| 8 | 110% | 85% | 65% |
| 9 | 120% | 100% | 80% |
| 10 | 135% | 110% | 90% |
| 11 | 150% | 120% | 100% |
| 12 | 165% | 135% | 110% |
| 13 | 180% | 150% | 120% |
| 14 | | 165% | 135% |
| 15 | | 180% | 150% |
| 16 | | | 165% |
| 17 | | | 180% |

- சிறப்பு சரண்டர் மதிப்பு (SSV) = சிறப்பு சரண்டர் மதிப்புக் காரணி X பெய்ட் அப் ரொக்க உத்திரவாதம்
- சிறப்பு சரண்டர் மதிப்புக் காரணிகள் (SSV) IRDAIவின் அனுமதிக்கு உட்பட்டு அவ்வப்பொழுது நிறுவனத்தின் மறுபரிசீலனை மற்றும் முடிவிற்கு உட்பட்டது.

**வரி நன்மைகள்:** வரி நன்மைகளுக்கு நடப்பில் இருக்கும் வரிச் சட்டங்கள் பொருந்தும் மற்றும் அவ்வப்பொழுது மாற்றத்திற்கு உட்பட்டது.

**கருணைக் காலம்:**
''கருணைக் காலம் என்றால்'' பிரீமியத்தை செலுத்துவதற்கு உரிய நாளில் இருந்து கூடுதல் காலத்திற்குள், எந்தவித அபராதம் அல்லது தாமதக் கட்டணம் ஆகியவை இன்றி செலுத்துவதற்கு காப்பீட்டாளர் அளிக்கும் காலம் ஆகும், இந்த காலத்தில், எந்தவித தடங்கலும் இன்றி, பாலிசியின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, காப்பீடு பாதுகாப்புடன் பாலிசி நடைமுறையில் உள்ளது போல் கருதப்படும். பிரீமியம் செலுத்துவதற்கான இந்தக் கருணைக் காலமானது 30 நாட்கள் ஆகும்,

**நாமினேஷன் மற்றும் அசைன்மென்ட்:** காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 39 இல் வரையறுத்துள்ளபடி மற்றும் அவ்வப்பொழுது மாற்றப்படுவதற்கு உட்பட்டும் நாமினேஷனானது பாலிசியின் கீழ் அனுமதிக்கப்படுகிறது, காப்பீட்டுச் சட்டம் 1938, பிரிவு 38 இல் வரையறுத்துள்ளபடி மற்றும் அவ்வப்பொழுது மாற்றப்படுவதற்கு உட்பட்டும் அசைன்மென்ட்டானது பாலிசியின் கீழ் அனுமதிக்கப்படுகிறது.

**கடன்:** அவிவா பாலிசிக்கு எதிராக எந்தவித கடனும் வழங்குவதில்லை

**இலவச பார்வைக் காலம் (ஃப்ரீ லுக் பீரியட்):**
இலவச பார்வைக் காலத்தில், அதாவது, பாலிசி ஆவணம் கிடைக்கப் பெற்ற நாளில் இருந்து 15 நாட்களுக்குள் (ஒரு வேளை பாலிசி தொலைதூர விற்பனை மூலம் கோரப்பட்டிருந்தால் 30 நாட்கள்) விதிகள் மற்றும் நிபந்தனைகளை மதிப்பாய்வு செய்யும் உரிமை பாலிசிதாரருக்கு உள்ளது. ஒரு வேளை பாலிசிதாரர் இலவச பார்வைக் காலத்தில் காரணங்களைத் தெரிவித்து, பாலிசியை பாலிசிதாரர் திரும்ப அனுப்பும் பொழுது, நிறுவனமானது ரத்து செய்த நாளில் பிரீமியத்தை, காப்பீட்டுக் காலத்திற்கான விகிதாச்சார காப்பீட்டு பிரீமியத்தையும், மருத்துவ செலவுகள், ஏதாவது இருந்தால் அவற்றையும் மற்றும் முத்திரைத்தாள் வரி ஆகியவற்றையும் கழித்துக் கொண்டு திரும்ப வழங்கும்.

ஒரு வேளை பாலிசியானது தொலைதூர விற்பனையின் மூலம் விற்கப்பட்டு இருந்தால், இலவச பார்வைக்காலமாக (ஃப்ரீ லுக்) 30 நாட்கள் அனுமதிக்கப்படுகிறது

**நீக்குதல்கள் (ஏதாவது இருப்பின்):**
பாலிசியின் கீழ் காப்பீடு துவங்கிய அல்லது புதுப்பித்தல் நாள் முதல் 12 மாதங்களுக்குள் ஒரு வேளை ஆயுள் காப்பீட்டாளரின் மரணமானது தற்கொலை மூலமாக இருந்தால் மற்றும் பாலசி நடப்பில் இருப்பதற்கு உட்பட்டு, நாமினி அல்லது பாலிசிதாரரின் பயனாளர். மரண நாள் வரை செலுத்திய மொத்த பிரீமியங்களின் குறைந்தபட்சம் 80% ஐ அல்லது மரண நாளில் உள்ள சரண்டர் மதிப்பு, இதில் அதிகமானதை பெற தகுதி பெறுகிறார்.

**ஒப்புதல்**
பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் மற்றும் துவக்கத்திற்கான ரொக்கத்தை நிறுவனம் பெற்றுக் கொள்வது என்பது நிறுவனத்திற்கு காப்பீட்டை எழுத்துக் காப்புறுதி (அன்டர்ரைட்) செய்யும் கடமை எதையும் உருவாக்கவில்லை மற்றும் காப்பீட்டை எழுத்துக் காப்புறுதி (அன்டர்ரைட்) செய்து பாலிசியை வழங்கும் வரை நிறுவனத்திற்கு எந்தவித பொறுப்பும் கிடையாது.

**அவிவாவுடன் ஏன் முதலீடு செய்ய வேண்டும்?**
அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் என்பது டாபர் இன்வெஸ்ட் கார்ப் மற்றும் அவிவா இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் லிமிடெட், ஒரு யூகேவை (UK) அடிப்படையாகக் கொண்ட ஒரு குழு, அதவுடனான இந்திய உறவு 1834 வரை பின்நோக்கிச் செல்லும், ஆகிய இரண்டின் கூட்டுறவு ஆகும். அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸை தேர்ந்தெடுத்ததன் மூலம், நீங்கள் உலகின் பழமையான காப்பீட்டுக் குழு ஒன்றின், அதன் வரலாறு 1696 வரை பின்நோக்கிச் செல்லும், நிர்வாக அனுபவத்தைப் பெறுகிறீர்கள். 1884 இல் தோற்றுவிக்கப்பட்ட டாபர் இந்தியா லிமிடெட், டாபர் குழுக்களில், முதன்மையானது மற்றும் இந்தியாவின் பழமையான மற்றும் பெரிய நிறுவனங்களில் ஒன்றாகும். இது பாரம்பரிய சுகாதாரப் பொருட்களை உற்பத்தி செய்வதில் இந்தியாவின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும்.

**பிரிவு 41**
காப்பீட்டுச் சட்டம் 1938 (1) பிரிவு 41 இன்படி காப்பீட்டாளரின் அட்டவணை அல்லது வெளியிடப்பட்ட விற்பனை அறிக்கையில் அனுமதியளிக்கப்பட்ட தள்ளுபடியைத் தவிர எந்த ஒரு நபரும், நேரடியாகவோ, மறைமுகமாகவோ எந்த ஒரு நபரையும் எந்தவித ஆயுள் அல்லது இந்திய நாட்டில் உள்ள சொத்துக்களை காப்பீடு செய்து கொள்ள, தொடர, புதுப்பிக்க அல்லது புதிதாக எடுக்க, முழுமையாக அல்லது பகுதி கமிஷனை அல்லது பாலிசியில் கூறப்பட்டுள்ள பிரீமியத்தில் தள்ளுபடி செய்து தூண்டக் கூடாது அல்லது எந்த ஒரு நபரும் ஒரு பாலிசியை எடுத்துக் கொள்ள அல்லது ரெனிவல் செய்ய, அல்லது தொடர்வதற்கு எந்தவித தள்ளுபடியையும் பெறக் கூடாது.

இந்த உட்பிரிவின் அர்த்தத்தின்படி, காப்பீடு அளிப்பவர் அமர்த்தி இருக்கும் ஒரு முகவர், பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின்படி அவர் நம்பிக்கையுள்ள ஒரு காப்பீட்டு முகவர் என்பதை தெரிவிக்கும் பொழுது, பிறகு ஒரு ஆயுள் காப்பீட்டு பாலிசியை அந்த காப்பீட்டு முகவர் தன் பெயரில் தன் ஆயுளுக்காக எடுத்துக் கொண்டு அதன் மூலம் அவர் கமிஷனைப் பெற்றுக் கொண்டால், அது தள்ளுபடியைப் பெற்றதாக ஆகாது.

(2) இந்த ஷரத்துக்களின் விதிமுறைகளைப் பின்பற்றுவதில் எந்த ஒரு நபராவது தவறினால், அவருக்கு அபராதம் 10 இலட்சம் வரை நீட்டிக்கப்படும்.

**பிரிவு 45**
காப்பீட்டுச் சட்டம் 1938 பிரிவு 45 இன் ஷரத்துக்கள் மற்றும் அவை அவ்வப்பொழுது திருத்தப்படுவதற்கு உட்பட்டு இவை ஒப்பந்தத்தில் பிரயோகிக்கப்படுகிறது.

**கேள்விகள் மற்றும் புகார்கள்**

மேலும் கூடுதல் விவரங்கள், கேள்விகள் அல்லது புகார்களுக்கு, தயவு செய்து கீழ்க்கண்ட எண்ணில் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்:

1800 103 7766 (BSNL/MTNL உபயோகிப்பாளர்களுக்கு இலவசம்) அல்லது 0124-2709046 அல்லது SMS "Aviva" என்று 5676737 என்ற எண்ணிற்கு அனுப்பவும்
ஃபேக்ஸ் எண் : 0124-2709007

*டாபர் இன்வெஸ்ட் கார்ப் மற்றும் அவிவா இன்டர்நேஷனல் ஹோல்டிங்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியாகும்.*


**அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

**தலைமை அலுவலகம்:** அவிவா டவர், செக்டார் ரோடு, கோல்ஃப் கோர்ஸ் எதிரில், DLF ஃபேஸ்-V, செக்டார் 43, குர்காவ்-122003, ஹரியானா, இந்தியா தொலைபேசி எண்: +91 124-2709000, ஃபேக்ஸ் எண்: +91 124-2571210
இணையதளம்: www.avivaindia.com
மின் அஞ்சல்: customerservices@avivaindia.com

**பதிவு அலுவலகம்:** 2வது மாடி, பிரகாஷ்தீப் பில்டிங், 7, டால்ஸ்டாய் மார்க், புது தில்லி-110001, இந்தியா.

நிறுவன அடையாள எண் (CIN): U66010DL2000PLC107880


போலியான தொலைபேசி அழைப்பு மற்றும் கற்பனையான / மோசடியான சலுகைகளில் இருந்து ஜாக்கிரதை: IRDA ஆஃப் இந்தியா பொதுமக்களுக்கு தெளிவு படுத்துவது என்னவென்றால்:

• IRDA ஆஃப் இந்தியா அல்லது அதன் அதிகாரிகள், எந்த விதமாக காப்பீடு அல்லது நிதித் திட்டங்கள் அல்லது இன்வெஸ்ட் பிரீமியங்கள் ஆகியவற்றின் விற்பனை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை.
• IRDA வ் இந்தியா எந்தவித போனஸ் அறிவிப்புகளையும் வெளியிடுவதில்லை.

அப்படிப்பட்ட தொலைபேசியை பெறும் பொதுமக்கள், தொலைபேசி அழைப்பின் விவரங்கள் மற்றும் எண் ஆகியவற்றைக் கொண்டு காவல் துறையில் ஒரு புகாரைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அவிவா வெல்த் பில்டர் - ஒரு தனி நபர், இணைப்பு இல்லாத, பங்கு பெறாத, சேமிப்புடன் கூடிய ஆயுள் காப்பீட்டுத் திட்டம். மேலே அளிக்கப்பட்டுள்ள வர்த்தகச் சின்னம் அவிவா பிரான்ட்ஸ் லிமிடெடுக்கு சொந்தமானது மற்றும் அது உரிமம் பெற்று அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்டால் வழங்கப்படுகிறது. அவிவா லைஃப் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட். IRDA ஆஃப் இந்தியாவின் பதிவு எண்: 122. வரி நன்மைகள் நடப்பில் இருக்கும் வரிச் சட்டத்தின்படி அமையும் மற்றும் அவை மாற்றத்திற்கு உட்பட்டது. உதவிக்கான எண்: 1800-180-22-66/1800-103-77-66, UIN: 122N100V04, Advt. No.: Dec 50/19,